| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **39/2023** |
| **DATE** | : | **18.09.2025** |
| **NAME** | : | **கதிர்வேல்** |
| **Husband's Name** | : | **துரைசிங்கம்** |

**வா.சா.1 குறுக்கு விசாரணை**

1. பிரதிவாதிகள் என் நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்திருந்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். தாவா சொத்து தாங்கி என்ற கிராமத்தில் சர்வே எண் 9/3A1ல் உள்ளது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரனம் 22 செண்ட் ஆகும். எனது சொத்தின் அருகில் பிரதிவாதிகளின் சொத்து அமைந்துள்ளது. பிரதிவாதிகள் ஏற்கனவே என் மீது அசல் வழக்கு எண் 513/2010 தாக்கல் செய்தார்கள். மேற்படி வழக்கில் தாவா சொத்து இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்று தீர்ப்பானது. அவர்களின் சர்வே எண் வேறு எனது சர்வே எண் வேறு என்று சாட்சி தானாகவே சாட்சியம் அளித்தார். அந்த வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் மூலம் சொத்தை அளக்க வேண்டும் என்று நான் ஒரு மனு தாக்கல் செய்திருந்தேன். அந்த மனுவில் இந்த வழக்கின் தாவா சொத்தையும் சேர்த்து அளக்க வேண்டும் என்று தாக்கல் செய்திருந்தோம். சாட்சி தானாகவே முன்வந்து வழக்கறிஞர் ஆணையர் அளக்கும் போது இவ்வழக்கின் பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததாக தெரிவித்தார். அந்த வழக்கில் இவ்வழக்கின் பிரதிவாதிகள் எனது சொத்தை எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்று வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

2. அந்த வழக்கு எனக்கு எதிராக தீர்ப்பானது என்று சொன்னால் அந்த வழக்கின் சொத்தும் இந்த வழக்கின் சொத்தும் வெவ்வேறு. அந்த வழக்கின் தீர்ப்பிற்கு பிறகு வேண்டுமென்றே நான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கிற்கு எதிராக மாண்புமிகு காஞ்சிபுரம் சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு

தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் எந்த காலத்திலும் எனது சொத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும் நான் வேண்டுமென்றே அவர்கள் மீது உள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாவா சொத்தை அளந்து பார்ப்பதற்காக மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை.

3. மேற்சொன்ன பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கு 2022ல் தீர்ப்பானது. அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பானதால் ஏற்பட்ட பகையின் காரணமாக பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2022ல் தீர்ப்பான வழக்கிற்கு 2023ல் என்ன காரணத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சொத்தை அளந்து பார்த்தால் பிரச்சனை சரியாகிவிடும், அளக்க விடாமல் பிரதிவாதிகள் பிரச்சனை செய்கிறார்கள். நான் சொத்தை அளப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கை பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்வதற்கு எந்த முகாந்திரமும் கிடையாது, இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**